இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 359 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 24 – ஞாயிற்றுக்கிழமை 09 ஆகஸ்ட் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 359 : Thiruvalluvar Year - 2057 - Aadi 24 - Sunday 09 August 2026 - Chennai 12 Pages ₹ 5.00


### பாரதூரமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு – சிறுபான்மையினருக்கு எதிரான

# FCRA திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறுக!

## ஒன்றிய அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக. 9 -**

**“பாரதூரமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு FCRA திருத்தச் சட்ட முன் வரைவை திரும்பப் பெற வேண்டும்” என்று ஒன்றிய அரசை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறை (திருத்த) மசோதா 2026, சிறுபான்மையினரின் தொண்டு நிறுவனங்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தின் மூலம் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நம்பியிருக்கும் நலத்திட்ட உதவிகள் முடக்கப்படக் கூடும் என்ற கடுமையான கவலைகள் எழுந்துள்ளன.

2026 மார்ச் 25 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட “வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026” என்பது ஒரு வழக்கமான ஒழுங்குமுறை



நடவடிக்கையையும் தாண்டிய ஆபத்தானதாகும். இது மேம்பட்ட வெளிப்படைத்தன்மையையும் தேசியப் பாதுகாப்பையும் நோக்கிய ஒரு நடவடிக்கையாக முன் வைக்கப்பட்டாலும், உண்மையில் இது ஒன்றிய அரசின் நிர்வாகத் தலையீட்டைக் கணிசமாக அதிகரிக்கிறது; இதன் மூலம், வெளிநாட்டு நிதியுதவியைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டமாக இருந்த FCRAவை, அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), அறக்கட்டளைகள், கல்வி மற்றும் மத நிறுவனங்கள் மீது அரசின் விரிவான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் ஒரு கருவியாக இந்தப் புதிய மசோதா மாற்றுகிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் FCRA சட்டமே, உலகில் உள்ள எந்தவொரு ஜனநாயக நாடுகளிலும் இல்லாத வகையில், குடிமைச் சமூகத்தை மிகவும் கடுமையாகக் கட்டுப்படுத்தும் சட்டங்களில் ஒன்றாக ஏற்கனவே இருந்து வருகிறது. 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் அதில் பல கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தன.

இந்நிலையில் இச்சட்டம் குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

**இந்தியாவின் பல்வேறு மதப் பிரிவுகளைச் சேர்ந்த முக்கிய மதத் தலைவர்கள் இடம்பெற்ற, கழக நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன் அவர்கள் தலைமையிலான சிறுபான்மையினருக்கான கூட்டு நடவடிக்கைக் குழு மன்றத்தின் பிரதிநிதிகள், 6.8.2026 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சரைச் சந்தித்தனர்.**

**2026 மார்ச் மாதம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட ‘FCRA திருத்தச் சட்ட முன்வரைவு 2026’ ஐத் திரும்பப் பெறவும், FCRA சட்டத்தின் பிரிவு 15ஐ நீக்கவும் அல்லது அதற்கு மாற்றாக, இச்சட்ட முன்வரைவையும், வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம், 2010ன் செயல்பாடுகள் குறித்த விரிவான ஆய்வையும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும் உள்துறை அமைச்சரிடம் அவர்கள் வலியுறுத்தினர்.**

**முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வரைவின் பாரதூரமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு, அதன் விதிகளைத் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வரும் தி.மு.க., இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறது.**

**சிறுபான்மையினரின் உரிமைகளைக் கருத்தில் கொண்டு, மன்றத்தின் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலித்து, தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரிலேயே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

---

### தொகுதி மறுவரையறை: ‘நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டம்’ என்ற பெயரில்

# த.வெ.க. அரசு நடத்தும் அரசியல் நாடகத்தில் தி.மு.க. பங்கேற்காது!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அறிவிப்பு!

**சென்னை, ஆக. 9 -**

**“தொகுதி மறுவரையறை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டம் என்ற பெயரில் த.வெ.க. அரசு நடத்தும் அரசியல் நாடகத்தில் தி.மு.க. பங்கேற்காது” என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவரும் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தொகுதி மறுவரையறை எனும் ஆபத்தை முதன்முதலில் எடுத்துரைத்து எச்சரித்தவர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் அழைத்து கூட்டம் நடத்தி, தமிழ்நாட்டின் கோரிக்கைகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றினார். அதன் தொடர்ச்சியாக, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநில முதலமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்களை அழைத்து நியாயமான தொகுதி மறுவரையறைக்கான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தையும் சென்னையில் நடத்திக் காட்டினார். ‘தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்’ என்ற முழக்கத்தை முன்வைத்து ஒட்டுமொத்த மாநிலங்களையும் எங்கள் கழகத் தலைவர் ஓரணியில் திரட்டிக் காட்டினார்.

**சட்ட வரைவின் நகலைக் கொளுத்தியவர் எங்கள் தலைவர்!**

அனைவரது எதிர்ப்பையும் மீறி, நாடாளுமன்றத்தில் இது தொடர்பான சட்டமுன்வரைவை பா.ஜ.க. கொண்டுவந்தபோது, சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பணிகளுக்கு இடையிலும் இதனை எதிர்த்துப் போராடினார். கருஞ்சட்டை அணிந்து, கருப்புக் கொடி ஏற்றி, சட்ட வரைவின் நகலைக் கொளுத்தினார். நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேறாமல் தோல்வியடையச் செய்தார்.

தற்போதைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தொகுதி மறுவரையறைச் சட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றப் போவதாக எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. திருத்தப்பட்ட சட்டமுன்வடிவு குறித்து எந்தத் தகவலும் இல்லாத நிலையில் அது இன்னும் கையில் கிடைக்கப்பெறாத நிலையில், இதில் புதிதாக விவாதிக்கவும் எதுவும் இல்லை. தமிழ்நாட்டின் நிபந்தனைகளை ஏற்கனவே நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் வாயிலாகத் தெரிவித்துவிட்டோம்:

- 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்து வரையறுக்கப்படும் என்று கடந்த 2000ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் அவர்கள் உறுதி அளித்தவாறே, தற்போதும் இந்த வரையறை 2026இல் இருந்து மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்று ஒன்றிய அரசு உறுதி அளிக்க வேண்டும். மேலும், அரசமைப்புச் சட்டத்தில் அதற்குரிய சட்டத் திருத்தமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.
- மேலும், நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் பட்சத்தில், “1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ,



அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

- தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவீதமான 7.18 என்பதை எக்காரணம் கொண்டும் ஒன்றிய அரசு மாற்றம் செய்யக் கூடாது.
- தொகுதி மறுசீரமைப்புக்கு தமிழ்நாடு எதிரானதாக இல்லை அதேசமயம் கடந்த ஐம்பதாண்டுகளாக சமூக, பொருளாதார நலத்திட்டங்களைச் சிறப்புற செயல்படுத்தியதற்கான தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது எனவும் அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

**தொகுதி மறுவரையறையை தி.மு.க. நிச்சயம் எதிர்க்கும்!**

அந்த நிலைப்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் இப்போதும் உறுதியாக நிற்கிறது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய தேசிய முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் இப்போதும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கும்போது இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்துக்கான தேவை என்ன? முந்தைய நிலைப்பாட்டில் இருந்து அவர்களை மாற்றுவதற்குத்தான் இந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறதா?

தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எதிரான, நமது பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையிலான தொகுதி மறுவரையறையைத் தி.மு.க. நிச்சயம் எதிர்க்கும். அதில் எள்ளளவும் எங்களிடம் மாற்றம் இல்லை.

**காவிரிப் பிரச்சினையில் கள்ள மவுனம்!**

ஆனால், காவிரிப் பிரச்சினைக்காகத் தமிழ்நாடு முழுவதும் தற்போது போராட்டம் நடைபெற்று வருகிறது. மேகதாது அணை தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென தமிழ்நாட்டின் பல்வேறு கட்சிகளும் வலியுறுத்தி வருகிறார்கள். அனைவரும் கேட்கும் அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தாமல், அதுகுறித்து வாயும் திறக்காமல் த.வெ.க. அரசு கள்ள மவுனம் காக்கிறது. யாரும் கேட்காமலேயே அவசர அவசரமாகத் தொகுதி மறுவரையறைக்கான கலந்தாய்வுக் கூட்டத்தைத் த.வெ.க. அரசு தற்போது கூட்டியிருப்பது காவிரி பிரச்சினையில் இருந்து மக்களைத் திசைதிருப்பும் அரசியல் நாடகமேயன்றி வேறில்லை.

தொகுதி மறுவரையறைக் கலந்தாய்வுக் கூட்டத்தில் தி.மு.க. பங்கேற்க வேண்டுமென்றால் அதற்கு முன்பாக தமிழ்நாட்டின் உயிர்ப் பிரச்சினையான மேகதாது அணை குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என நிபந்தனை விதித்து எங்கள் கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் நேற்று தி.மு.க.வின் நிலைப்பாட்டை அறிக்கை வாயிலாகத் தெளிவுபடுத்திவிட்டார். எனவே, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் ஒருமித்த கோரிக்கையை நிராகரித்துள்ள த.வெ.க. அரசின் இன்றைய கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது.

**எம்.பி.க்களுடன் சென்று ஒன்றிய அமைச்சரை சந்திக்கத் தயாரா?**

**தமிழ்நாட்டின் காவிரி உரிமையிலும் டெல்டா உழவர்கள் மீதும் இந்த அரசுக்கு உண்மையாகவே அக்கறை இருக்கிறதென்றால், மேகதாது அணைக்கு எதிராகச் சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை நமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று ஒன்றிய ஜல் சக்தி அமைச்சரிடம் நேரில் வழங்கிடத் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் முன்வர வேண்டும். தமிழ்நாடு அரசின் சார்பில் பிரதிநிதிகளை அனுப்ப தமிழ்நாடு முதலமைச்சர் தயாரா?**

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.